# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 2081/11 - 2018 ජූලි මස 24 වැනි අඟහරුවාදා - 2018.07.24

***2081/11 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 24 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை***

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

*38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழான கட்டளை*

எனது குறிப்பு இல. : எல்டீ/05/2004/ஈ/14.
பிர. செ. குறிப்பு இல. : என்எல்/டீஎஸ்/03/ஏஎல்/01.

*1972 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க மற்றும் 1974 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க பொருள்கோடல் (திருத்தச்) சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான பொருள்கோடல் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 12) 18 ஆம் பிரிவின் பிரகாரம், காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் கயந்த கருணாதிலக்க ஆகிய நான், 2016.07.04 ஆம் திகதிய 1974/2 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியின் பக்கம் 1ஏ இல் பிரசுரிக்கப்பட்ட " 2016 ஆம் ஆண்டின் 118 ஆம் இலக்கக், கட்டளையையும் " 2016.08.23 ஆந் திகதிய 1981/37 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அதற்குரிய "பிழை திருத்தத்தையும்" இத்தால் இரத்துச் செய்கின்றேன்.*

கயந்த கருணாதிலக்க,
காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர்.

காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சு,
"மிஹிகத மெதுர",
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2018, யூலை 12.

*08 - 331*

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

*38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழான கட்டளை*

***2018 ஆம் ஆண்டின் 160 ஆம் இலக்கக் கட்டளை***

எனது தொடர் இல. : எல்டீ/05/2004/ஈ/14.
பிர. செ. தொடர் இல. : என்எல்/டீஎஸ்/03/ஏஎல்/01.

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) பிரிவு 38 இன் காப்பு வாசகம் "அ" இன் மூலம் எனக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சராகிய கயந்த கருணாதிலக்க ஆகிய நான், அட்டவணையின் நிரல் 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள காணி அடுத்தல் அலுவலர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள வேறு அலுவலர் அத்தகைய அட்டவணையின் நிரல் 2 இல் தொடர்புடைய பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிலத்தின் உடமையினை உடனடியாக கையகப்படுத்திக்கொள்வதற்கு இதன் மூலமாக கட்டளையினை வழங்குகின்றேன்.

கயந்த கருணாதிலக்க,
காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர்.

காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சு,
"மிஹிகத மெதுர",
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2018, யூலை 12.

## அட்டவணை

1. **காணி எடுத்தல் அலுவலர்** : பிரதேச செயலாளர், நல்லூர்.

2. **காணியின் விபரம்** : வட மாகாணத்தில், யாழ்ப்பாணம் மாவட்டத்தில், நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில், நீராவியடி கிராம அலுவலக பிரிவு இல. ஜே/101 இல், வண்ணார்பண்ணை வட கிழக்கு (யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லை வரம்பினுள் அமைந்துள்ள வட்டார இல. 23) என்று அழைக்கப்படுகின்ற கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயார் செய்யப்பட்ட 2005.02.27 ஆந் திகதியிடப்பட்ட வைஏ/ஜேஎப்எப்/2004/099 ஆம் இலக்க சுவட்டு வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள நயனாதேவன் வளவு, பேதன் வளவு எனக் குறிப்பிடப்படுகின்ற மூன்று ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலங்கள் பின்வருமாறு வரையறை செய்யப்படுகின்றன :

**01. துண்டு இல. 1 — நயனாதேவன் வளவு, பேதன் வளவு — விஸ்தீரணம்: 0.0042 ஹெக்டயார்**

வடக்கு : வித்தியாலய ஒழுங்கை மற்றும் சொக்கர வளவு ; கிழக்கு : சொக்கர வளவு மற்றும் துண்டு இல. 2 ; தெற்கு : துண்டு இல. 2 மற்றும் துண்டு இல. 3 ; மேற்கு : துண்டு இல. 3 மற்றும் வித்தியாலய ஒழுங்கை.

**02. துண்டு இல. 2 — நயனாதேவன் வளவு, பேதன் வளவு, வரி மதிப்பீட்டு இல. 60/6, வித்தியாலய ஒழுங்கை — விஸ்தீரணம்: 0.0717 ஹெக்டயார்**

வடக்கு : துண்டு இல. 3, 1 மற்றும் சொக்கர வளவு ; கிழக்கு : சொக்கர வளவு மற்றும் யாழ்ப்பாணம் இந்து வித்தியாலய விளையாட்டு மைதானம்; தெற்கு : யாழ்ப்பாணம் இந்து வித்தியாலய விளையாட்டு மைதானம் மற்றும் துண்டு இல. 3 ; மேற்கு : துண்டு இல. 3.

**03. துண்டு இல. 3 — நயனாதேவன் வளவு, பேதன் வளவு, வரி மதிப்பீட்டு இல. 60/5, வித்தியாலய ஒழுங்கை — விஸ்தீரணம்: 0.0796 ஹெக்டயார்**

வடக்கு : வித்தியாலய ஒழுங்கை மற்றும் துண்டு இல. 1 மற்றும் 2 ; கிழக்கு : துண்டு இல. 2 மற்றும் யாழ்ப்பாணம் இந்து வித்தியாலய விளையாட்டு மைதானம் ; தெற்கு : யாழ்ப்பாணம் இந்து வித்தியாலய விளையாட்டு மைதானம் ; மேற்கு : யாழ்ப்பாணம் இந்து வித்தியாலய விளையாட்டு மைதானம் மற்றும் வித்தியாலய ஒழுங்கை.

8 - 332

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.